Judicial Form No.53

(see Rule 42)

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

C.C. No:- 216/2014 Date:- 22.07.2026

Deposition of witness for prosecution :- PW :-5

| | | | |
|---|---|---|---|
| Name | சுந்தரம் | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**முதல் நிலை விசாரணை:-**

1. நான் இறுதியாக பங்களா புதூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வந்து கடந்த 2014-ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 28.11.2013-ம் தேதியன்று நான் புளியம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது தீபா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவை பெற்று புளியம்பட்டி காவல் நிலைய குற்ற எண் 383/2013 இ.த.ச. பிரிவுகள் 457,380 ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டு 28.11.2013-ம் தேதியன்று 14.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் செல்வராஜ், அசாரூதின் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் சாட்சிகள் தீபா, நாகராஜ், அருணாச்சலம், பாலாமணி, சாந்தலிங்கம், செல்வராஜ், அசாரூதின் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு கோப்புகளை தொடர்புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை:–</u>**

1. நான் சொல்லும் நாள் மற்றும் நேரத்தில் எவ்விதமான புகார் மனுவையும் பெறவில்லை என்றும் வழக்கை பதிவு செய்யவில்லை என்றும் மற்றும் புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.